# DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

CC.No. 50/2025 LW– 1 PW– 1

Name : இளவரசன் ( புகார்தாரர்)

Father's/Husband's Name : ராஜேந்திரன்

Village : பாலப்பநாயக்கன்பட்டி

Taluk : நத்தம்

District : திண்டுக்கல்

Age : 34/2026

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 12th day of March 2026

(எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டுள்ளது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து விவசாய வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கில் இறந்து போன ராஜேந்திரன் மற்றும் சுமதி ஆகியோர்கள் என் அப்பா, அம்மா ஆவார்கள். இவ்வழக்கின் எதிரியை நான் பார்த்ததில்லை. கடந்த 22.12.2024ம் தேதி பகல் 3.45 மணியளவில் கோமனாம்பட்டி பிரிவின் அருகே என் அப்பா, என் அம்மாவை ஏற்றிக் கொண்டு இருசக்கர வாகனத்தில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வந்தபோது, நத்தத்திலிருந்து மதுரை நோக்கி சென்ற கார் ஒன்று எனது அப்பாவின் இருசக்கர வாகனத்தில் மோதி விபத்து ஏற்பட்டதாக நேரில் பார்த்தவர்கள் எனது அப்பாவின் மொபைல் மூலம் எனக்கு தகவல் சொன்னார்கள். அதன் பேரில் நான் சம்பவ இடம் சென்று பார்த்தபோது, என் அம்மாவிற்கு ஒரு கால் உடைந்து பின்

பக்க தலையில் பலத்த காயம் ஏற்பட்டு சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார். என் அப்பாவிற்கு தலை மற்றும் காலில் பலத்த காயம் ஏற்பட்டு இருந்த நிலையில் என் அப்பாவை 108 அவசர ஊர்தியில் ஏற்றி நத்தம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன்.

2) சம்பவ இடத்தில் என் அப்பா சென்ற இருசக்கர வாகனம் வலது பக்கம் சேதம் ஏற்பட்டு கீழே கிடந்தது. நத்தம் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்த 10 நிமிடங்களில் என் அப்பா சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். பின்னர் என் அம்மாவின் உடலை அவசர ஊர்தி மூலம் நத்தம் அரசு மருத்துவமனையில் சேர்த்தேன். பின்னர் நத்தம் காவல் நிலையத்தில் அன்றைய தினம் மாலையில் புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனு மற்றும் அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **(புகார் மனு அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.) போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

3) எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் ஓரளவு தெரியும். புகார் மனுவை யார் எழுதினார்கள் என்றால் போலீசார் எழுதினார்கள், விபரம் நான் சொன்னேன். சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான், கேள்விப்பட்டுதான் சம்பவ இடத்திற்கு வந்தேன் என்றால் சரிதான். எந்த வாகனத்தில் நான் சென்றேன், அதன் எண், அந்த வண்டியின் வகை போன்ற விவரங்களை போலீசார் விசாரிக்கும் போது சொன்னேன். மேற்படி விபரங்கள் புகார் மனுவிலும் சொல்லப்பட்டுள்ளதா என்றால் சொல்லப்பட்டுள்ளது. மேற்படி விபரங்கள் குறிப்பிடப்படாமல் புகார் மனு இருந்தால் அது நான் கொடுத்த புகார் மனு இல்லை என்றால் சரியல்ல, போலீசார் நான் எங்கு சென்று திரும்பி வந்தேன் என்ற அனைத்து விபரங்களையும் கேட்டார்கள் சொல்லியுள்ளேன்.

4) நான் ஒரு இருசக்கர வாகனத்திலும், எனது பெற்றோர் மற்றொரு இரு சக்கர வாகனத்திலும் சென்றோம் என்றால் சரிதான், அதனால் எப்பொழுது எனது பெற்றோர் வந்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனது பெற்றோர்கள் யாரைப் பார்க்க வந்தார்கள் என்ற விவரம் தெரியாது என்றால் சரிதான். முடக்கு சாலையில் உள்ள வீடுகள் அனைத்தும் கிழக்கு பக்கமாக உள்ளது என்றால் சரிதான். எனது பெற்றோர் முடக்கு சாலையில் இருந்து சாத்தாம்பாடி பிரிவுக்கு வருவதற்கு நத்தம் – மதுரை நான்கு வழி சாலையில் எதிர் திசையில் வந்தார்கள் என்றாலும், அது தவறான திசை என்றாலும் சரிதான். முடக்கு சாலையில் இருந்து சாத்தாம்பாடி பிரிவு ஆனது 2 கிலோமீட்டர் தூரம் உள்ளது என்றாலும், மேற்படி இரண்டு கிலோமீட்டர் தூரமும் தவறான திசையில் தான் எனது தந்தை இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்தார் என்றால் சரிதான்.

5) புகார் மனுவில் சாத்தம்பாடி பிரிவில் சாலையில் திடீரென்று குறுக்காக கிழக்கிலிருந்து மேற்காக சென்றபோது விபத்து ஏற்பட்டதாக தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். நான் சொல்லும் மேற்படி இடத்தில் பேரிகார்ட், சிக்னல் போன்றவை இல்லை என்றால் சரிதான். முடக்கு சாலையில் இருந்து சாத்தாம்பாடி பிரிவு செல்வதற்கு முடக்கு சாலையில் இருந்து வத்திப்பட்டி பிரிவு சென்று மதுரை – நத்தம் சாலையில் மேற்குபுறமாக செல்ல வேண்டும் என்றால் சரிதான். அவ்வாறு செல்லாமல் நத்தம் – மதுரை சாலையில் தவறான திசையில் வந்தததில்தான் விபத்து ஏற்பட்டது என்றாலும், மேற்படி விபத்திற்கு எனது தந்தையின் அஜாக்கிரதைதான் காரணம் என்றாலும் சரிதான். விபத்து நடந்த பகுதியானது நான்கு வழிச்சாலை என்றாலும், கனரக வாகனங்கள் செல்லக்கூடிய சாலை என்றாலும் சரிதான். எனது தந்தைக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரிதான். எனது தந்தை ஓட்டி சென்ற வாகனத்திற்கு இன்சூரன்ஸ் இல்லை என்றாலும் சரிதான். விபத்து சமயம் எனது பெற்றோர் இருவரும் தலைக்கவசம் அணியவில்லை என்றால் சரிதான்.

6) விபத்தானது எனது பெற்றோரின் கவன குறைவு மற்றும் அஜாக்கிரதையால் ஏற்பட்டது என்றாலும், திடீரென்று குறுக்கே வந்ததில் தான் விபத்து ஏற்பட்டது என்றாலும் சரிதான். நான் புகாரில் சொல்லியுள்ளது போல் எதிரி அதிவேகமாகவும், கவனகுறைவாகவும் ஓட்டி வந்து விபத்து ஏற்படவில்லை என்றால் சரிதான். எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. இழப்பீடு பெறுவதற்காக எதிரி மீது பொய் புகார் கொடுக்கப்பட்டு அதற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை.**

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J Aafreen Begum M.com., L.LM.,

Digitally signed by J Aafreen Begum M.com., L.LM.,
Date: 2026.03.12 14:45:10 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்